உடுமலை டிஎஸ்பி-க்கு பாராட்டு

தமிழ்நாடு காவல் துறை இயக்குநர் மகேஷ்குமார் அகர்வாலிடம் இருந்து சான்றிதழை பெற்றுக் கொள்கிறார் உடுமலை டிஎஸ்பி எஸ்.தையல்நாயகி.

உடுமலை, செப். 9: மாநில அளவில் நடைபெற்ற துப்பாக்கிச் சுடும் போட்டியில் இரண்டாமிடம் பிடித்த உடுமலை டிஎஸ்பி-க்கு பாராட்டு நிகழ்ச்சி புதன்கிழமை நடைபெற்றது.

தமிழ்நாடு காவல் துறை சார்பில் அதிகாரிகளுக்கான மாநில அளவிலான துப்பாக்கிச் சுடுதல் போட்டி - 2025, சென்னை மருதம் தமிழ்நாடு கமாண்டோ படை துப்பாக்கிச் சுடும் பயிற்சி தளத்தில் அண்மையில் நடைபெற்றது.

இப்போட்டியில் உடுமலை டி.எஸ்.பி. எஸ்.தையல்நாயகி, பிஸ்டல் மற்றும் ரைபிள் பிரிவுகளில் ஒட்டுமொத்தமாக இரண்டாமிடம் பிடித்து வெள்ளிப் பதக்கம் பெற்றார். இதைத் தொடர்ந்து துப்பாக்கிச் சுடும் போட்டியில் சிறப்பான செயல்பாட்டை வெளிப்படுத்திய அவருக்கு பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

இந்நிலையில் வெள்ளிப் பதக்கம் வென்று திருப்பூர் மாவட்ட காவல் துறைக்கு பெருமை சேர்த்த உடுமலை டி.எஸ்.பி. எஸ்.தையல்நாயகிக்கு பாராட்டு நிகழ்ச்சி உடுமலையில் புதன்கிழமை நடைபெற்றது. இதில் உடுமலை காவல் துறை அதிகாரிகள் மற்றும் காவலர்கள் கலந்து கொண்டு டி.எஸ்.பி. எஸ்.தையல்நாயகிக்கு வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்தனர்.

கொண்டத்துக்காளியம்மன் கோயில் உண்டியல் காணிக்கை ரூ.18.32 லட்சம்

அவிநாசி, செப்.9: பெருமாநல்லூர் கொண்டத்துக்காளியம்மன் கோயிலில் பக்தர்கள் உண்டியல் காணிக்கையாக ரூ.18.32 லட்சம் செலுத்தியிருந்தனர்.

திருப்பூர் மாவட்டத்தில் பிரசித்தி பெற்றதாக பெருமாநல்லூர் கொண்டத்துக்காளியம்மன் கோயில் விளங்குகிறது. இக்கோயிலில் உண்டியல் காணிக்கை எண்ணும் பணி புதன்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு அறங்காவலர் குழு தலைவர் மனோகரன், அறங்காவலர் சுந்தரமுத்து, பானுமதி சண்முகம், கோயில் செயல் அலுவலர் முருகன், சிவன்மலை கோயில் இணை ஆணையர் கிருத்திகா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பெருமாநல்லூர் கேஎம்சி பள்ளி மாணவர்கள், மகா விஷ்ணு சேவா சங்கத்தினர் உள்ளிட்டோர் காணிக்கைகளை எண்ணும் பணியில் ஈடுபட்டனர்.

இதில், ரூ. 18 லட்சத்து 32 ஆயிரம் ரொக்கம், 88 கிராம் தங்கம், 70 கிராம் வெள்ளி ஆகியவற்றை காணிக்கையாக பக்தர்கள் செலுத்தியிருந்தனர்.

ஆக்கிரமிப்பில் உள்ள கோயில் நிலங்களை மீட்க வேண்டும்

துறவிகள் மாநாட்டில் தீர்மானம்

தாராபுரத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகிறார் சுவாமி வேதாந்தானந்தா.

திருப்பூர், செப். 9: ஆக்கிரமிப்பில் உள்ள கோயில் நிலங்களை மீட்க வேண்டும் என்று தாராபுரத்தில் நடைபெற்ற துறவிகள் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தாராபுரத்தில் அமராவதி ஆரத்தி திருவிழா கடந்த செப்டம்பர் 6-ஆம் தேதி தொடங்கி 8-ஆம் தேதி வரை நடைபெற்றது.

இந்த துறவிகள் மாநாட்டுக்கு, அகில பாரதிய சன்னியாசிகள் சங்கத்தின் நிறுவனர் சுவாமி ராமானந்த மகராஜ் தலைமை தாங்கினார். விழா ஒருங்கிணைப்பாளர் மதுரை இளைய ஆதீனம் விஸ்வலிங்கேஸ்வர தம்பிரான் சுவாமிகள், சுவாமி வேதாந்தானந்தா, சுவாமி கோரக்கர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

ஆக்கிரமிப்பில் உள்ள கோயில் நிலங்களை மீட்டு, ஆக்கிரமித்தவர்கள் மீது வழக்குப் பதிய, தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். கோயிலுக்கு சொந்தமான கட்டடங்களின் வாடகைகளை தற்போதைய நிலவரப்படி உயர்த்தி, நிலங்களுக்கு உரிமையான இறைவன் பெயரில் கட்டணமில்லா கல்லூரிகள் அமைக்க வேண்டும். கோயில் கும்பாபிஷேக நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் மாற்று மத மக்கள் பிரதிநிதிகள், கோயிலின் மீது நம்பிக்கை உள்ளது என கோயில் பதிவேட்டில் கையொப்பமிடுவதை காட்சிப்படுத்த வேண்டும். அதிகரித்து வரும் மதமாற்றத்தை தடுக்க வேண்டும்.

கும்பாபிஷேகங்களில், அப்பகுதியைச் சேர்ந்த மடாதிபதிகள், சன்னியாசிகளுக்கு முன்னுரிமை தர வேண்டும். வேலூர் அருகே, துறவியைத் தாக்கிய காவலரைப் பணியிடை நீக்கம் செய்ய வேண்டும். சன்னியாசிகள் சங்கம் சார்பில், 2028-இல் கும்பகோணம் மகாமகத்தை தென்பாரத கும்பமேளாவாக நடத்துவது, மதுரை மீனாட்சி அம்மன் கோயில் கும்பாபிஷேகத்துக்கு அனைத்து பக்தர்களுக்கும் அனுமதி அளிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதையடுத்து நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், பாஜக மாநிலத் துணைத் தலைவர் பேராசிரியர் கனகசபாபதி, இந்து மக்கள் கட்சித் தலைவர் அர்ஜுன் சம்பத் ஆகியோர் பங்கேற்று பேசினர். பின்னர், அகஸ்தீஸ்வரர் கோயில் வளாகத்தில் நடைபெற்ற அமராவதி ஆரத்தி நிகழ்ச்சியை ஏராளமான பக்தர்கள் கண்டுகளித்தனர். நிறைவாக, கோயில் வளாகத்தில் வள்ளிக்கும்மி ஆட்டம் மற்றும் சத்சங்கம் நடைபெற்றன.

பாறைக்குழிகளில் குப்பை கொட்டுவதை தடுக்க திருப்பூர் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குழு ஆலோசனை

அமைச்சர் கே.ஜி.அருண்ராஜிடம் அறிக்கை அளித்த திருப்பூர் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குழு ஒருங்கிணைப்பாளர் ஆர்.சதீஷ்குமார்.

திருப்பூர், செப்.9: திருப்பூர் மாநகராட்சி பாறைக்குழிகளில் குப்பை கொட்டுவதைத் தடுக்க திருப்பூர் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குழு ஆலோசனை அறிக்கையை அளித்துள்ளது.

திருப்பூர் சுற்றுச்சூழல் பாதுகாப்புக் குழு சார்பில் திருப்பூர் மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சரான சுகாதாரத் துறை அமைச்சர் கே.ஜி.அருண்ராஜை தலைமைச் செயலகத்தில் நேரில் சந்தித்து இந்த அறிக்கை கொடுக்கப்பட்டது.

அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:

திருப்பூர் மாநகராட்சி குப்பை பிரச்னைக்கு அடிப்படையான மாற்றத்தையும், வார்டு வாரியாக தனித்திட்டத்தையும், பெரும் குப்பை நிறுவனங்களுக்கு தனியான அடிப்படை கட்டமைப்பையும், அனைவரும் தெரிந்து கொள்ளும் வகையில் பொது நிர்வாக செயலாக்கத்தையும் ஏற்படுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருப்பூரில் குப்பை பிரச்னை தொடர்பாக தொடர் போராட்டங்கள் நடந்து வரும் சூழ்நிலையில் ஏற்கெனவே இப்பிரச்னை குறித்து முதல்வர் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளதாகவும், விரைவில் நிரந்தர தீர்வு ஏற்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் உறுதியளித்ததாக திருப்பூர் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குழு ஒருங்கிணைப்பாளர் ஆர்.சதீஷ்குமார் தெரிவித்துள்ளார்.

கல்லூரி மாணவர்களுக்கு காசநோய் குறித்த விழிப்புணர்வு

நிகழ்ச்சியில் பேசுகிறார் வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் டி.ராஜலட்சுமி.

வெள்ளக்கோவில், செப். 9: முத்தூர் அருகே உள்ள தனியார் கலை அறிவியல் கல்லூரி மாணவர்களுக்கு காசநோய் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி புதன்கிழமை நடைபெற்றது.

வெள்ளக்கோவில் வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் டி.ராஜலட்சுமி தலைமை வகித்து விழிப்புணர்வு உரையாற்றினார். காசநோயை கட்டுப்படுத்துதல், அதன் தொடக்க கால அறிகுறிகள், அரசு மருத்துவமனைகளில் வழங்கப்படும் இலவச சிகிச்சைகள் ஆகியவை குறித்து எடுத்துரைத்தார். மேலும், டெங்கு, மலேரியா உள்ளிட்ட கொசுக்கள் மற்றும் பூச்சிகளால் பரவும் நோய்களைத் தடுக்கும் முறைகள், குடும்ப நலத்திட்டங்கள், அரசின் பிற மக்கள் நல்வாழ்வுத் திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

நிகழ்ச்சியில், வெள்ளக்கோவில், முத்தூர் பகுதிகளைச் சேர்ந்த அரசு மருத்துவ அலுவலர்கள், சுகாதார மேற்பார்வையாளர்கள், சுகாதார ஆய்வாளர்கள் பங்கேற்றனர். கல்லூரி மாணவ, மாணவிகள், பேராசிரியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

பல்கலைக்கழகத் தேர்வு

திருப்பூர் குமரன் மகளிர் கல்லூரி மாணவியர் 7 பேருக்கு தங்கப்பதக்கம்

தங்கப்பதக்கம் வென்ற மாணவியர்.

திருப்பூர், செப்.9: கோவை பாரதியார் பல்கலைக்கழகத் தேர்வுகளில் திருப்பூர் குமரன் மகளிர் கல்லூரி மாணவியர் 7 பேர் தங்கப் பதக்கம் வென்றுள்ளனர்.

இது தொடர்பாக கல்லூரி முதல்வர் டி.வசந்தி, நிர்வாக அலுவலர் என்.நிர்மல்ராஜ் ஆகியோர் தெரிவித்துள்ளதாவது:

கடந்த ஏப்ரல் மாதத்தில் நடைபெற்ற கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தின் பருவத் தேர்வுகளில் திருப்பூர் குமரன் மகளிர் கல்லூரி மாணவிகள் ஜி.ரிச்சிகா பி.காம் பிரிவிலும், எஸ்.காவ்யா கணிதத்திலும், ஆர்.அமுதா, எம்.ராகசுதா, எம்.ராகினி ஆகியோர் எம்.காம் பிரிவிலும், கே.அனிதா மைக்ரோபயாலஜி பிரிவிலும், ஜி.தன்யலட்சுமி ஆங்கிலத்திலும் தங்கப் பதக்கங்களுடன் 39 ரேங்குகளுடன் சாதனை படைத்துள்ளனர்.

கல்லூரிக்கு பெருமை சேர்த்த இவர்களுக்கு, கல்லூரியின் தலைவர் மற்றும் தாளாளர் செந்தில்நாதன், தொடர்பு அலுவலர் ம.கார்த்திகை செல்வி ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

ஆட்சியர் அலுவலகத்தில் தீக்குளிக்க முயன்ற மூதாட்டி

திருப்பூர், செப். 9: திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தீக்குளிக்க முயன்ற மூதாட்டியால் பரபரப்பு ஏற்பட்டது.

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு புதன்கிழமை பகல் 12 மணியளவில் மூதாட்டி ஒருவர் வந்தார். அலுவலகத்தின் நுழைவாயில் அருகே வந்தவர், திடீரென தான் கொண்டு வந்திருந்த பையில் இருந்த மண்ணெண்ணெய்யை உடலில் ஊற்றி தீக்குளிக்க முயன்றார்.

இதை அங்கு பாதுகாப்புப் பணியில் இருந்த காவலர் பார்த்து உடனடியாக ஓடி வந்து அந்த மூதாட்டியை தீக்குளிக்க விடாமல் தடுத்தார். இது குறித்து வீரபாண்டி காவல் நிலையத்துக்கு தகவல் தெரிவித்தார். போலீஸார் விரைந்து வந்து அந்த மூதாட்டியிடம் விசாரணை நடத்தினர்.

விசாரணையில் அந்த மூதாட்டி, பல்லடம் பனப்பாளையத்தைச் சேர்ந்த வேலுத்தாயி (62) என்பது தெரியவந்தது. அவருடைய மகள் பாண்டிசெல்வி என்பவர் கடந்த 2019-ஆம் ஆண்டு இருசக்கர வாகனத்தில் சென்றபோது அரசுப் பேருந்து மோதி இறந்துவிட்டார். இது குறித்து பல்லடம் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

பாண்டிசெல்வியின் இறப்புக்கு இழப்பீடு கேட்டு அவருடைய குடும்பத்தினர் திருப்பூர் மோட்டார் வாகன விபத்து நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தனர். அதில் பாண்டிசெல்வியின் குடும்பத்தினருக்கு ரூ.22 லட்சம் இழப்பீடு வழங்க தீர்ப்பாகி உள்ளது. ஆனால் இதுவரை இழப்பீடு பணம் கிடைக்கவில்லை என்றும், பாண்டிசெல்வியின் மகளுக்கு அந்தத் தொகையை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்றும் கூறி வேலுத்தாயி தீக்குளிக்க முயன்றது தெரியவந்தது.

இதைத் தொடர்ந்து போலீஸார் 108 ஆம்புலன்ஸ் வரவழைத்து வேலுத்தாயியை திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். அங்கு அவரிடம் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது. திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தொடர்ந்து 2-ஆவது நாளாக நடைபெற்ற இந்த தீக்குளிப்பு சம்பவத்தால் ஆட்சியர் அலுவலகத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

மின்னணு பயிர் கணக்கெடுப்புப் பணி: தன்னார்வலர்களுக்கு அழைப்பு

பல்லடம், செப். 9: பல்லடம் வட்டாரத்தில் மின்னணு பயிர் கணக்கெடுப்புப் பணியில் ஈடுபட தன்னார்வலர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பல்லடம் வேளாண்மை உதவி இயக்குநர் (பொறுப்பு) ப.கணேசன் புதன்கிழமை விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு முழுவதும் மின்னணு முறையில் பயிர் சாகுபடி பரப்புகளை பயிர் வாரியாக துல்லியமாக மொபைல் செயலி மூலம் கணக்கெடுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியில் தோட்டக்கலைத் துறை, வேளாண் வணிகத் துறை, விதைச் சான்றளிப்புத் துறை மற்றும் வேளாண்மைப் பொறியியல் துறையினருடன் இணைந்து கிராமங்களில் உள்ள தன்னார்வலர்களும் ஈடுபட்டு வருகின்றனர்.

மின்னணு பயிர் கணக்கெடுப்பு பணியை மேற்கொள்ளும் தன்னார்வலர்களுக்கு, அவர்கள் பதிவு செய்யும் ஒவ்வொரு தரிசு நில உட்பிரிவுக்கும் ரூ.3, தனிப் பயிருக்கு ரூ.5, கூடுதல் பயிருக்கு ரூ.2 எனவும், அதிகபட்சமாக ரூ.9 வரையிலும், மலைப் பயிர்களுக்கு ரூ.10 வீதமும் மதிப்பூதியம் வழங்கப்படுகிறது. இப்பணியில் ஈடுபட விரும்பும் தன்னார்வலர்கள் தங்களது ஆண்ட்ராய்டு கைப்பேசியில் சம்பந்தப்பட்ட செயலியை பதிவிறக்கம் செய்து, கணக்கெடுப்புப் பணியை மேற்கொள்வதற்கான பயிற்சியைப் பெறலாம். இதற்கான பயிற்சியை, பல்லடம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர், வேளாண்மை அலுவலர், வேளாண்மை துணை அலுவலர் மற்றும் அலுவலர்கள் வேளாண்மை உதவி அலுவலர்கள் வழங்க தயாராக உள்ளனர்.

எனவே, இப்பணியில் ஆர்வமுள்ள தன்னார்வலர்கள் பல்லடம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநரை தொடர்புகொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்லடத்தில் விருது பெற்ற மூத்த வீரர்களுக்கு பாராட்டு

பல்லடம், செப்.9: தமிழக அரசின் விருது பெற்ற மூத்த வீரர்களுக்கு, பல்லடத்தில் பாராட்டு நிகழ்ச்சி புதன்கிழமை நடைபெற்றது.

பல்லடம் நடைப்பயிற்சி நண்பர்கள் குழு சார்பில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு, மூத்த தடகள வீரர் பாரத் தங்கராசு தலைமை வகித்தார்.

இதில், தமிழக அரசின் முதல்வர் விருது பெற்ற மூத்தோர் தடகள வீரர் மணிவண்ணன், கோவை மூத்தோர் தடகள சங்கம் சார்பாக நடைபெற்ற குண்டு எறிதல் மற்றும் வட்டு எறிதல் போட்டியில், முதல் மற்றும் மூன்றாமிடம் பெற்ற வீரர் ஆண்டனி ஆகியோருக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

இதில், நடைப்பயிற்சி நண்பர்கள் குழுவை சேர்ந்த பெரியசாமி, பழனிவேல் ராஜன், திருமூர்த்தி, மதிமணி, செல்வம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். உடற்பயிற்சி ஆசிரியர் வீரமணி நன்றி கூறினார்.

பாங்க் ஆஃப் இந்தியா
Bank of India BOI
கோயமுத்தூர் கடன் வசூல் துறை
கோயமுத்தூர் மண்டல அலுவலகம்
'ஸ்டார் ஹவுஸ்' எண்.324, ஒப்பணக்கார வீதி, கோயமுத்தூர்-641 001.
போன்: (0422) 2397 221, 238 3204
மின்னஞ்சல் : assetrecovery.coimbatore@bankofindia.bank.in

பொது அறிவிப்பு

பேங்க் ஆஃப் இந்தியாவின் அடையாளம் காணும்குழு வங்கியின் மறு ஆய்வுக்குழுவின் உறுதி செய்தலுக்கிணங்க கீழ்குறிப்பிட்டுள்ள கடன்தாரர்/உத்தரவாதமளித்தவரை வேண்டுமென்றே தவணை தவறியவர்கள் என்று மறு ஆய்வுக்குழுவிற்கு ஒரு முன்மொழிவை அளிக்க முடிவு செய்துள்ளது. வங்கி, அடையாளம் காணும்குழுவுக்கு 02.06.2026 அன்றே அத்தகைய ஆலோசனை / உத்தரவினை, அத்தகைய முன்மொழிவிற்கான விபரங்களுடன் வங்கியின் மறு ஆய்வுக்குழு முன் வேண்டுமென்றே தவணை தவறியவர்களுக்கான உறுதி மொழியினை அல்லது ஒப்பந்தப்படியான நிலுவைகளைத் திரும்பச் செலுத்த கடன்தாரர்/உத்தரவாதமளித்தவருக்கு அவகாசம் வழங்கக் கோரப்படுகிறது. இத்தகைய ஆலோசனைகள் / உத்தரவுகள் வங்கியில் கடன்தாரர்கள்/உத்தரவாதமளித்தவர்களின் கடைசியாக அளித்துள்ள முகவரிக்கு விரைவு அஞ்சல் / பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. 02.06.2026 அன்று அனுப்பப்பட்ட அவற்றில் சில இந்திய அஞ்சல் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்ட தேடுதல் அறிக்கையின்படி பட்டுவாடா செய்யப்படாது திரும்பப்பெறப்பட்டுவிட்டன. அத்தகை முகவரிதாரர்களின் விபரம் கீழ்வருமாறு:

வ.எ	பெயர் மற்றும் முகவரி
1.	திருமதி.N. சத்யவேணி, (திரு.J. விஜய் ஹார்துராஜின் உத்தரவாதமளித்தவர்), க/பெ.B.T. செந்தில்குமார், D2 S1, குவார்ட்டர்ஸ் டென்ட் ஹில், குன்னூர், நீலகிரி – 643 102.
2.	திருமதி.S. பிரீதா, க/பெ.G. சகாதேவன், 6/521, கூகல் கக்குச்சி அஞ்சல், நீலகிரி – 643 214.
3.	திருமதி.N. சத்யவேணி, (திரு.B. ராஜ்குமாரின் உத்தரவாதமளித்தவர்), க/பெ.B.T. செந்தில்குமார், D2 S1, குவார்ட்டர்ஸ் டென்ட் ஹில், குன்னூர் – 643 102.
4.	திரு.B. திப்பன், கன்னேரி கிராமம், தங்காடு, ஹொரானள்ளி அஞ்சல், உதகமண்டலம் – 643 003.
5.	திருமதி.N. சத்யவேணி, (திரு.B. திப்பனின் உத்தரவாதமளித்தவர்), க/பெ.B.T. செந்தில்குமார், D2 S1, குவார்ட்டர்ஸ் டென்ட் ஹில், குன்னூர், நீலகிரி – 643 102.
6.	திரு.B.T. செந்தில்குமார், (திருமதி.K. பார்வதியின் உத்தரவாதமளித்தவர்), த/பெ. பெள்ளி திப்பன், எண்.2 S1, குவார்ட்டர்ஸ் டென்ட் ஹில், குன்னூர் தாலுகா, நீலகிரி – 643 102.
7.	திருமதி. சத்யவேணி, D2 S1, குவார்ட்டர்ஸ் டென்ட் ஹில், பாலகிளவா, குன்னூர் – 643 102.
8.	திரு.B.T. செந்தில்குமார், (திருமதி.N. சத்யவேணியின் உத்தரவாதமளித்தவர்), த/பெ. பெள்ளி திப்பன், எண்.2 S1, குவார்ட்டர்ஸ் டென்ட் ஹில், குன்னூர் தாலுகா, நீலகிரி – 643 102.
9.	திரு.N. சிவகுமார், 18/73B, தேனலை, கெத்தி – 643 101.
10.	திரு.T.K. பாலகிருஷ்ணன், (திரு.B. ரகுநந்தனின் உத்தரவாதமளித்தவர்), 12/1 VNM, சின்னக்கவுண்டர் நகர் 2வது வீதி, மாணிக்கம்பாளையம் Hsg யூனிட், பிரிவு, ஈரோடு – 638 004.
11.	திரு.B. ரகுநந்தன், (திருமதி.F. சிந்தியாவின் உத்தரவாதமளித்தவர்), எண்.12/1 VNM, சின்னக்கவுண்டர் நகர் 2வது வீதி, மாணிக்கம்பாளையம் Hsg யூனிட், பிரிவு, ஈரோடு – 638 004.
12.	திரு.T.K. பாலகிருஷ்ணன், (திருமதி.V. ஜுலியின் உத்தரவாதமளித்தவர்), 12/1 VNM, சின்னக்கவுண்டர் நகர் 2வது வீதி, மாணிக்கம்பாளையம் Hsg யூனிட், பிரிவு, ஈரோடு – 638 004.
13.	திரு.B. ரகுநந்தன், (திருமதி.V. ஜுலியின் உத்தரவாதமளித்தவர்), 12/1 VNM, சின்னக்கவுண்டர் நகர் 2வது வீதி, மாணிக்கம்பாளையம் Hsg யூனிட், பிரிவு, ஈரோடு – 638 004.
14.	திரு.S. லிங்கன், த/பெ. சேவனன், கூகல் கிராமம் மற்றும் அஞ்சல், ஊட்டி தாலுகா, உதகமண்டலம், நீலகிரி – 643 001.
15.	திருமதி.M. மகேஸ்வரி, 107/78, சின்னதம்பி கவுண்டர் வீதி, ஸ்ரீனிவாசபுரம், ஆவந்துறை அஞ்சல், கோயம்புத்தூர் – 641 101.
16.	திரு.R. மோகன்ராஜ், 6/102, தாளியூர், பன்னிமடை கிராம ஊராட்சி, கோயம்புத்தூர் – 641 017.
17.	திருமதி.M. மகேஸ்வரி, க/பெ. மோகன்ராஜ், (திரு.R. மோகன்ராஜின் உத்தரவாதமளித்தவர்), 107/78, சின்னதம்பி கவுண்டர் வீதி, ஸ்ரீனிவாசபுரம், ஆவந்துறை அஞ்சல், கோயம்புத்தூர் – 641 101.
18.	திருமதி.B. கலாவதி, த/பெ. பெள்ளி திப்பன், கன்னேரி கிராமம், தங்காடு, ஹொரானள்ளி அஞ்சல், நீலகிரி – 643 003.
19.	திருமதி.A.K. சரோஜா, கதவு எண்.622, நடுஹட்டி அஞ்சல், நீலகிரி – 643 217.
20.	திரு.V. ஷியாம்சுந்தர், கதவு எண்.6B3, ஜெயவந்தன வேலுநகர், G. கவுண்டம்பாளையம், கோயம்புத்தூர் – 641 020.
21.	திரு.V. வெங்கடாச்சலம், மசகல், கூகல் ஊராட்சி, கோத்தகிரி – 643 217.
22.	திரு.B.S. சங்கர் ராஜ், எண்.11/478, நஞ்சநாடு கிராமம் மற்றும் அஞ்சல், நீலகிரி – 643 004.
23.	திரு.S. ராஜேந்திரன், த/பெ.R. சேவனன், (திரு.M. சுரேஷ் பாபுவின் உத்தரவாதமளித்தவர்), 2/329, கல்லட்டி, நடுஹட்டி கிராமம், கோத்தகிரி, நீலகிரி – 643 214.
24.	திரு.S. ராஜேந்திரன், (திரு.M. சிவகுமாரின் உத்தரவாதமளித்தவர்), த/பெ.R. சேவனன், 2/329, கல்லட்டி, நடுஹட்டி கிராமம், கோத்தகிரி, நீலகிரி – 643 214.
25.	திரு.S. மணியன், த/பெ.P. ஸ்ரீனிவாசன், (திருமதி.H. ருக்மணியின் உத்தரவாதமளித்தவர்), 72, பழைய மருத்துவமனை லைன், குன்னூர் தாலுகா, நீலகிரி – 643 102.

தற்போது இந்த அறிவிப்பின் நாளிதழ் பிரசுரத்தின் பின்னர், நாங்கள் மேற்குறிப்பிட்ட கடன்தாரர்/உத்தரவாதமளித்தவர் ஆகியோருக்கு இன்னும் ஒரு முறை தெரிவிப்பது என்னவென்றால், கோயம்புத்தூர், பேங்க் ஆஃப் இந்தியா, கோயம்புத்தூர் மண்டல அலுவலகத்தை அணுகி மேற்சொன்ன வங்கியின் அடையாளம் காணும் குழுவின் ஆலோசனை / உத்தரவினைப் பெற்றுக்கொண்டு இவ்வறிவிப்பு வெளியிடப்பட்ட 15 தினங்களுக்குள் கணக்கினை நேர்செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம். அவ்வாறு 15 தினங்களுக்குள் தாங்கள் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காவிடில் இந்த அறிவிப்பு உங்களுக்கு முறையாக பட்டுவாடா செய்யப்பட்டுவிட்டது என ஏற்றுக் கொள்வதுடன், இது விஷயமாக அவர்கள் சொல்லிக் கொள்ள ஏதுமில்லை எனக்கருதி வங்கி இந்த விஷயத்தில் மேல் நடவடிக்கை தொடரும்.

ஒப்பம்/- அடையாளம் காணும் குழு

சுவாதீன அறிவிப்பு

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் (54/2002) (மேற்படி 'சட்டம்') இங்கு காணும் டிரஸ்டுகளின் டிரஸ்டி என்ற அளவில் செயல்படும் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிட்-ன்(இனி 'ARCIL' என அழைக்கப்படும்) கீழே கையொப்பமிட்டுள்ளவர் அதிகாரபூர்வ அலுவலராக இருக்கிற படியால், மேற்படி சட்டம் பிரிவு 13(12)-ன் கீழும், அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் 3-ன் கீழும் (மேற்படி 'விதிகள்') தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி பின்வரும் அட்டவணையில் காணும் கடன் கணக்கு விவரங்களின் படி கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் அவர்களுக்கு கோரிக்கை அறிவிப்பினை (DEMAND NOTICE) அனுப்பி கடன் பாக்கியை செலுத்துமாறு கோரியிருந்தார்.

ஆனால், கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் பாக்கித் தொகையை முழுவதும் செலுத்தத் தவறிவிட்டதால் கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், மேற்படி சட்டம் 13 உட்பிரிவு (4) மற்றும் அதற்குத் தொடர்புடைய மேற்படி விதி 8-ன் கீழ் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துகளை "உள்ளது உள்ளவாறு, உள்ள இடத்தில் உள்ளவாறு, எதும் அடிப்படையில்" கீழ் குறிப்பிட்ட தேதிகளில் இங்கு கையொப்பமிட்டுள்ளவர் தமது சுவாதீனத்தில் (POSSESSION) எடுத்துக் கொண்டுள்ளார்.

வ. எண்	கடன்தாரர் / ஜாமீன்தாரர் பெயர் / விற்கும் வங்கி பெயர் / கடன் கணக்கு எண்	கோரிக்கை அறிவிப்பு தேதி / இத்தேதி வரை நிலுவைத் தொகை	சுவாதீன தேதி
1	திரு. பால் வின்சென்ட் S, திருமதி. லதா P, திரு. வினோத் P, திரு. பாக்யராஜ் P சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்ட் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் LAN : XOHLERO00002510988 ட்ரஸ்டின் பெயர் : Arcil - 2024C - 006 - Trust	கோரிக்கை அறிவிப்பு தேதி : 20-07-2023 ரூ.47,57,411/- (11-07-2023 அன்றுள்ளபடி) மற்றும் 12-07-2023 முதல் அத்தொகை மீது குறிப்பிட்ட விதத்தில் அமைந்த எதிர்கால வட்டி மற்றும் எதிர்பாராத செலவுகள், கட்டணங்கள், செலவினங்கள் உட்பட. ரூ.77,22,222.22/- மொத்த நிலுவைத்தொகை 01/07/2026 அன்றுள்ளபடி	04/09/2026

சொத்து விவரம் : சொத்தும் அதன் அனைத்து முக்கிய பகுதிகளும், அமைவிடம் கோபிசெட்டிபாளையம் பதிவு மாவட்டம், கவுந்தப்பாடி சார் பதிவு மாவட்டம், பெருந்துறை வட்டம், பவானிபாளையம் கிராமம், நத்தம் சர்வே எண் 674, தற்போதைய நத்தம் சர்வே எண் 1041/18, மனை வாரி பட்டா எண் 54, இதில் மனையின் பரப்பளவு 73.85 சதுர மீட்டர் (795 சதுர அடி) மற்றும் அதன் மீதுள்ள கட்டிடம் மற்றும் அதனுடன் இணைந்த சாதனங்கள் உட்பட. இதன் எல்லைகள் :- செட்டிச்சி என்பவரின் மனைக்கு தெற்கு, பாபு என்பவரின் சொத்துக்கு வடக்கு, வடக்கு - தெற்கு சாலைக்கு மேற்கு, பாப்பனி என்பவரின் சொத்துக்கு கிழக்கு. இதன் அளவீடுகள் :- வடக்கு பக்கம் கிழக்கு - மேற்காக 41 3/4 அடி, தெற்கு பக்கம் கிழக்கு - மேற்காக 41 3/4 அடி, கிழக்கு பக்கம் வடக்கு - தெற்காக 19 1/4 அடி, மேற்கு பக்கம் வடக்கு - தெற்காக 19 1/4 அடி. மொத்தம் 795 சதுர அடி நிலம் மற்றும் அதன் மீதுள்ள RCC தள கட்டிடம், அனைத்து இதர மேல் கட்டுமானங்கள் அறைகள் மற்றும் மின் இணைப்பு வசதிகள் ஆகியவற்றுடன், 27.12.2011 தேதியிட்ட பாகப்பிரிவினைப் பத்திரத்தின் படி (ஆவண எண் 3962/2011) பொதுச் சாலைகளைப் பயன்படுத்தும் உரிமை மற்றும் பிற அனைத்து ஈஸ்மென்ட் உரிமைகளும்.

வ. எண்	கடன்தாரர் / ஜாமீன்தாரர் பெயர் / விற்கும் வங்கி பெயர் / கடன் கணக்கு எண்	கோரிக்கை அறிவிப்பு தேதி / இத்தேதி வரை நிலுவைத் தொகை	சுவாதீன தேதி
2	திரு. முகமது இஸ்மாயில் A திருமதி. சஃபீரா பேகம் M பஜாஜ் ஃபைனான்ஸ் லிமிடெட் LAN எண் : 5M9RSE42761610 & 5M9RSE47461671 டிரஸ்டின் பெயர் : Arcil - Retail Loan Portfolio - 042 - C - Trust	கோரிக்கை அறிவிப்பு தேதி : 20-10-2021 ரூ.17,61,278.24/- (20-10-2021 அன்றுள்ளபடி) மற்றும் 21-10-2021 முதல் அத்தொகை மீது குறிப்பிட்ட விதத்தில் அமைந்த எதிர்கால வட்டி மற்றும் எதிர்பாராத செலவுகள், கட்டணங்கள், செலவினங்கள் உட்பட. ரூ.33,23,070.93/- மொத்த நிலுவைத் தொகை 21/05/2026 அன்றுள்ளபடி	05/09/2026

சொத்து விவரம் : சொத்தும் அதன் அனைத்து முக்கிய பகுதிகளும், அமைவிடம் எண். 10(1), ஆதி திராவிடர் காலனி, J J நகர்-2, பெருமாள் புதூர், சாமராயப்பட்டி, கோமரலிங்கம், மடத்துக்குளம், திருப்பூர் - 642 204. இதன் எல்லைகள் :- வடக்கு - பழனியப்பன் மற்றும் சுப்பிரமணியன் சொத்து, தெற்கு - 12 அடி அகல கிழக்கு - மேற்கு பாதை, கிழக்கு - சீனிவாசன் சொத்து, மேற்கு - A.R.P. கிழக்கு - மேற்கு பாதை.

எனவே, முக்கியமாக மேற்படி கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள் / அடமான தாரர்கள் அவர்களுக்கும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில், SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(13)-ன் கீழ் மேற்படி அசையா சொத்து சட்டபூர்வமாக சுவாதீனத்தில் எடுக்கப்பட்டுள்ளது.எனவே, கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள் / அடமான தாரர்கள் அல்லது மற்றவர்கள் யாரும் இந்த அறிவிப்பு பெறப்பட்ட பிறகு ARCIL-ன் எழுத்து மூலமான முன் ஒப்புதல் இல்லாமல் மேற்காணும் கடனுக்கு ஈடான சொத்துகளை கிரயம், குத்தகை அல்லது வேறு இதர வழிமுறைகளில் உரிமை மாற்றி தருவதற்கு அல்லது விற்பதற்கு அல்லது பேரம் பேசுவதற்கு முடியாது. மீறி மேற்படி அசையா சொத்து தொடர்பாக ஏதேனும் பேரம் வைத்துக்கொண்டால் அது ARCIL-க்கும் செலுத்த வேண்டியுள்ள மேற்படி கடன் பாக்கிகளுக்கும், ஒப்பந்த விதத்தில் அமைந்த வட்டிக்கும்,எதிர்பாராத செலவுகள், கட்டணங்கள், செலவினங்கள் முதலியவற்றுக்கு கட்டுப்பட்டதாகும். கடனுக்கு ஈடான சொத்துகளை மீட்பது தொடர்பான கால அவகாசம் தொடர்பான மேற்படி சட்டம் பிரிவு 13 உட்பிரிவு (8)-ன் ஷரத்துகளை கவனத்தில் கொள்ளுமாறு கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இடம் : ஈரோடு / திருப்பூர்
தேதி : 10.09.2026
ஒம்/-, அதிகாரபூர்வ அலுவலர்
அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிமிடெட் (டிரஸ்டி என்ற அளவில்)

Arcil Premier ARC
அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிட்.,
CIN - U65999MH2002PLC134884. இணையத்தளம் : www.arcil.co.in
பதிவு அலுவலகம் : தி ருபி, 10வது தளம், 29, சேனாபதி பாபட் மார்க், தாதர் (மேற்கு), மும்பை - 400 028. தொ.பே.: +91 02266581300.
கிளை முகவரி : Arcil Arms எண் 1-G, 1வது தளம், செஞ்சரி பிளாசா, எண். 560-562, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை 600018. தொ.பே. எண். 044-48586071-75.

equitas SMALL FINANCE BANK
எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்
(Formerly Known as Equitas Finance Ltd)
பதிவு அலுவலகம்: எண்.769, ஸ்பென்சர் பிளாசா, 4வது தளம், பேஸ் II, அண்ணாசாலை, சென்னை , தமிழ்நாடு - 600002 போன் : 044-42995000, 42995050,

அசையா சொத்துக்கள் விற்பதற்கான விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை IV - A மின்படி (விதி 8 (6) யை பார்க்கவும்) - அசையா சொத்துக்கள் விற்பதற்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8 (6) உடன் கீழ் அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பின் மூலம் கடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பில் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் "எங்கு உள்ளதோ அப்படியே" "எப்படி உள்ளதோ அப்படியே" மற்றும் "என்ன இருக்கிறதோ அதே நிலையில்" என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) நிர்ணய விலை, டேவணித் தொகை, ஏல உயர்வு தொகை, மின்-ஏல தேதி மற்றும் நேரம் ஆகிய விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்கள் பெயர் & முகவரி	அசையா சொத்துக்களின் விவரங்கள் மற்றும் வங்கிக்கு தெரிந்தவரை வில்லங்கள் ஏதேனும் இருப்பின்	நிர்ணய விலை, டேவணித் தொகை, ஏல உயர்வுத் தொகை	மின் ஏல விற்பனைக்கான தேதி மற்றும் நேரம்	கடன் / மொத்த நிலுவைத் தொகை
திரு/திருமதி குருவாயூரப்பன் காளியப்பன் திரு/திருமதி தமிழ்செல்வி குருவாயூரப்பன் (இருவரின் முகவரி: 45323, மாமரத்துபட்டி, தென்குமாரபாளையம் பொள்ளாச்சி, தென்குமாரபாளையம் B-0- கோயம்புத்தூர், தமிழ்நாடு, 642107)	திருப்பூர் மாவட்டம், கோமங்கலம் சார்பதிவாளர் அலுவலக எல்லை, ஆனைமலை வட்டம், தென்குமாரபாளையம் கிராமம், மாமரத்துப்பட்டி நத்தம், பழைய சர்வே புல எண் 130/1A-ல் அடங்கிய புதிய சர்வே புல எண் 130/1A1-ல் அமைந்துள்ள, மொத்தம் 168 சதுர மீட்டர் (அல்லது 1808.352 சதுர அடி) பரப்பளவு நிலம், அதனை சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி; : வடக்கு ஆறுமுகம் அவர்களின் வீடு; தெற்கு காலி மனை; கிழக்கு பொதுக் கிணறு; மேற்கு தெற்கு வடக்கு பாதை.	ரூ.10,00,000/- ரூ.1,00,000/- ரூ.10,000/-	30.09.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். 700009398349 / 600000010653 27.09.2025 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.8,39,051/- மேலும் 28.09.2025 அன்று முதல் மாதாந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற. (07.09.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத் தொகை ரூ.10,77,586/-

சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்:
அஜித்குமார் 8190005434 , லியோ டேவிட் 9489484542 , பிரவீன்ராஜ் 9655080981

விருப்பமுள்ள வாங்குபவர்/ஏலதாரர்கள் மூலம் (EMD) முன்வைப்புத் தொகையினை, தேசியமயமாக்கப்பட்ட அல்லது பட்டியலில் உள்ள ஏதேனும் வங்கியின் NEFT/RTGS/DD மூலமாக "Equitas Small Finance Bank Ltd", கணக்கு எண்.200000807725 மற்றும் IFSC Code- ESFB0001001, Bhaggyam Galleria, New No.18, Bazulla Road, T. Nagar, Chennai - 600 017 என்ற பெயரில் உள்ள கணக்கில் செலுத்தி 29.09.2026 அன்றோ அல்லது அதற்கு முன்போ சமர்ப்பிக்க வேண்டும்.

மின் ஏல விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை www. Equitasbank.in & https://www.bankeauctions.com என்ற இணையதளம் மூலம் காணலாம்.

உடனடிச் செய்திகள் சூடாக சுருக்கமாக...
www.dinamani.com